யா/அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலை

# ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

# 2015

## அதிபர் அறிக்கை

**20.11.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

ஞான ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் புனித செபஸ்தியாரை முதற்கண் வணங்கி, அருகாமையில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் வேண்டி 2015 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கான அதிபர் அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தின் கல்விப் பணிப்பாளர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களே.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பண்டத்தரப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அவர்களே, அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தந்தை வணக்கத்திற்குரிய V.இராஜ்குமார் அவர்களே. அளவெட்டி கல்வாரி பூரண சுவிஷேச திருச்சபையின் போதகர் வணக்கத்திற்குரிய ஆமோஸ் அவர்களே.

கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வலயத்தின் விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலை அபிவிருத்திக்குழுவின் வலயப்பிரதிநிதியுமாகிய திரு. S. சிறீதரன் அவர்களே, வலிவடக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் திரு. ச.சஜீபன் அவர்களே, எமது பிரதேசத்தின் கிராம சேவை அலுவலர் திரு.சு.பூபாலசிங்கம் அவர்களே.

விழாவில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே, அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, ஏனைய உத்தியோகத்தர்களே, அன்பார்ந்த பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, மாணவர்களே அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் இன்றைய பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது மதிப்பிற்குரிய திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்கள் பாடசாலையும் கல்வி, கலை, விளையாட்டு என சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு மேன்மையுற வேண்டும் என்ற நோக்குடன் அரும்பணியாற்றி வருகின்றார்கள் அவர்கள் இவ் விழாவிற்கு வருகைதந்தந்திருப்பது எமக்குப் பெருமகழ்வைத் தருகின்றது. அவர்களை பணிவன்புடன் வரவேற்கின்றோம்.

சிறப்பு விருந்தினராக வருதைதந்திருக்கும் பண்டத்திரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையும், புனித செபஸ்தியார் ஆலயத்தின் குருவுமாகிய அருட்பணி. ச. இயூஜின் பிரான்சிஸ் அவர்கள் எமது பாடசாலையின்மீது அதித அக்கறை கொண்டவர். பாடசாலையின் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பூரண ஒத்துழைப்பினை நல்குபவர். அவர்களை பணிவன்புடன் வரவேற்கின்றோம்.

அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தந்தை வணக்கத்திற்குரிய V.இராஜ்குமார் அவர்கள் எமது அழைப்பினை ஏற்று தமது நேரத்ததை ஒதுக்கி இங்கு வருகை தந்துள்ளார். திருச்சபையினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளியில் இருந்து பல மாணவர்கள் எமது பாசாலையில் இணைவதற்கு தூண்டுகோலாக இருந்து செயற்படுபவர். அவர்களது சேவைகளை நினைவு கூர்ந்து அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

எமது அழைப்பினை ஏற்று இங்கு வருதைந்து எம்மை சிறப்பித்துக் கொண்டிருக்கும் அளவெட்டி கல்வாரி பூரண சுவிஷேச திருசசபையின் போதகர் வணக்கத்திற்குரிய ஆமோஸ் அவர்கள் எமக்காக தமது அன்றாடப்பணிகளையும், நேரத்தினையும் ஒதுக்கி இங்கு வருகைதந்துள்ளார் அவர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

வலிகாமம் கல்வி வலயத்தின் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலையின் அபிவிருத்திக் குழுவின் வலயப்பிரதிநிதியுமாகிய திரு. S. சிறீதரன் அவர்கள் எமது பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக எம்முடன் கலந்துரையாடி எமக்கு வேண்டிய வழிகாட்டல்களையும், ஆலோசனையினையும் வழங்கி வருகின்றார். எமது அழைப்பினை ஏற்று நேரத்தினை ஒதுக்கி இந்நிகழ்விற்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்தமையை நினைவு கூர்ந்து அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

வலி வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் திரு ச.சஜீபன் அவர்கள் எமது பாடசாலைக்கு மட்டுமல்ல வலி வடக்கு பிரதேசம் முழுவதற்கும் தனது சேவையினை மனமுவர்ந்து நல்குபவர். சிறிய பாடசாலைகளின் நலனில் அதிக அக்கறை கொண்டு செயற்படுபவர். எமது பாடசாலைக்கு பல உதவிகைளைப் புரிந்துள்ளார். இவ்வாண்டில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்க்கு தனது சொந்த நிதி மூலம் துவிச்சக்கர வண்டி ஒன்றினை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளார். எமது அழைப்பினை ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமையினை நினைவு கூர்ந்து அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

எமது பிரதேசத்தின் கிராம சேவையாளர் திரு.சு.பூபாலசிங்கம் அவர்கள் எமது பாடசாலையின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுபவர். பாடசாலையின் கட்டாயக் கல்விக்குழுவின் முக்கிய உறுப்பினராக இருந்து செயற்படுபவர். எமக்கு வேண்டிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி உதவி செய்பவர். அவர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

மற்றும் இவ்விழாவினைச் சிறப்பிக்க வருகைதந்திருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பெரியோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 ஆம் ஆண்டின் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றமைக்கு பாடசாலைச் சமூகத்தினர் பல்வேறு வகைகளிலும் தமது ஒத்துழைப்புக்களை நல்கி இருந்தனர். அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத்திட்டத்திற்கு திருமதி. ரஞ்சினி தயாளகுமாரன், செல்வி.K. மரின் சபேசினி (இரசாத்தி) ஆகியோர் முக்கிய பங்காற்றினார்கள்.

வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள், நவராத்திரி விழா, கலைநிகழ்வுகள், குருபூசைத்தினங்கள், தமிழ்மொழித்தினங்கள் ஆகியவை 2014 ஆம் ஆண்டில் நடைபெற்றன. இந்நிகழ்வுகளை சிறந்த முறையில் நடைபெற தமது பூரண ஒத்துழைப்பினை பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலைச்சமூகத்தினர் அனைவரும் தத்தமது பங்களிப்பினை வழங்கினார்கள்.

## *பாடசாலையின் வளர்ச்சி*

எமது பாடசாலையானது 78 ஆண்டுகள் நிறைவு கண்ட பாடசாலையாகும். இக்காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற வளங்களோடு இயங்கி அரிய சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது பாடசாலை ஆசிரியர்களது அயராத உழைப்பினாலும் உங்கள் அனைவரது ஊக்கத்தினாலும் தொடந்து சிறந்த கற்றல் பேறுகளையும் இணைப்பாடவிதானச்செயற்பாடுகளில் வெற்றிகளையும் பெற்று வருகின்றது.

## *பாடசாலை வரலாறு*

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஆங்காங்கே பல கத்தோலிக்க தேவாலயங்களை நிறுவியதுடன் கூடவே பாடசாலைகளையும் அமைத்தார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகளுள் ஒன்றே அளவெட்டி தெற்கில் (தற்போது அளவெட்டி மேற்கு) அமைந்துள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாகும். இப்பாடசாலையை அமைப்பதற்கு சுவாமி அவர்களுக்கு உறுதுணையாக இருந்நதவர்களில் திரு.மா.இராசேந்திரம் என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இப்பாடசாலை 1937 ஆம் ஆண்டு தை மாதம் 20 ஆம் திகதி 15 மாணவருடனும் ஓர் ஆசிரியருடனும் ஆரம்பமானது. ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. வ.போல் அவர்கள் வேதனம் பெறாமலே பாடசாலையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவரது முயற்சியின் பயனாக முதலாம் வருட முடிவில் மாணவர் தொகை 59 ஆகவும் ஆசிரியர் தொகை 3 ஆகவும் அதிகரித்தது.

பாடசாலையின் முன்னேற்றம் காரணமாக பாடசாலைப் பரிசோதகர் திரு.N.S.சாமுவேல் அவர்களின் பரிந்துரையின் பேரில் 1938-11-14 இல் உதவி நன்கொடை பெறும் ஆரம்பப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1963-01-15 இல் அரசாங்கப்பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் அளவெட்டி தெற்கு புனித செபஸ்தியான் றோ.க.த.க பாடசாலை என்ற பெயருடன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இயங்கி வந்த மேற்படி பாடசாலை காலக்கிரமத்தில் தனியான தற்காலிகக் கட்டிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. எனினும் வசதிகள் நிறைந்த நிரந்தரமான கட்டிடம் இல்லாதிருந்தமை பெரும் குறையாகவே இருந்து வந்தது.

இப் பெருங்குறையை நீக்கவும் பாடசாலை பல வழிகளிலும் முன்னேறிச் செல்லவும் தலைமையாசிரியர் திரு.ஏ.அடைக்கலமுத்து அவர்கள் பெரும் பணியாற்றினார். 01-05-1939 இல் 50 மாணவர்களுடனும் 05 ஆசிரியர்களுடனும் பாடசாலை பதிவு செய்யப்பட்டது. தலைமையாசிரியராக இருந்த திரு.க.சுப்பையா அவர்களின் விடா முயற்சியின் பெறுபேறாக 1978 ஆம் ஆண்டு களஞ்சிய அறையுடன் கூடிய 50' X 20' அளவுகொண்ட கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. 1983 இல் 40' X 20' அளவு கொண்ட இன்னொரு கட்டிடம் அதிபர் திரு ஐ. மார்க்கண்டன் அவர்களின் பெரும்முயற்சியின் பயனாக கட்டப்பட்டது. அதிபர் திரு. ஐ. மார்க்கண்டன் அவர்கள் 1983-11-25 முதல் 1997-01-01 வரை இப் பாடசாலையின் தலைமைப் பொறுப்பினை ஏற்று சிறந்த முறையில் நிர்வகித்தார். இவரது காலத்தில் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக 1995-07-24 முதல் 1996-01-31 வரை இப்பாடசாலை இடம்பெயர்ந்து மருதனார்மடத்தில் இயங்கிய யா/பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்து 1996-02-01 முதல் யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்துடனும், 1996-03-01 முதல் 1996-05-05 வரை யா/ மிருசுவில் றோ.க.த.க பாடசாலையிலும் இணைக்கட்பட்டிருந்தது. மீண்டும் 1996-05-06 முதல் இவ்விடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் பாடசாலைக் கட்டிடங்களுக்கும், சொத்துக்களுக்கும் அதிகளவு சேதங்கள் ஏற்பட்டன. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அதிபர் தமது நிர்வாகக் கடமைகளை அற்ற வேண்டி இருந்தது. தனது கிராமம், தான் கல்வி கற்ற பாடசாலை என்ற சிந்தனையுடன் நடந்து "மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்" பாடசாலையை தளரவிடாது காப்பாற்றினார்.

தொடர்ந்து தலைமை வகித்த திருமதி.யே.அன்ரனிப்பிள்ளை, திருமதி. வா.தர்மபாலசுந்தரம், திருமதி. M.J.A ஏனஸ்ற் அவர்கள் காலத்தில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட்டனர். இக்காலப் பகுதியில் சமையல் அறை, மலசல கூட வசதிகள் , நீர்த்தாங்கி ஆகியவை ஏற்ப்படுத்தப்பட்டது. பாடசாலைக்குரிய காணி 170X35 அடி விஸ்தீரணங் கொண்டது. ***( ஆதரம் - காங்கேசன் மலர் 1985)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமை தாங்கியோர்

| | பெயர் | இருந்து | வரை |
|---|---|---|---|
| 01 | திரு. ஏ. அடைக்கலமுத்து | 1937-01-20 | 1938-12-31 |
| 02 | திரு. ச. அந்தோனிப்பிள்ளை | 1939-01-01 | 1939-09-30 |
| 03 | திரு. எஸ். லூயீஸ் | 1939-10-01 | 1942-12-31 |
| 04 | திரு. எம். அருளப்பு | 0943-01-01 | 1944-12-31 |
| 05 | திரு. ஞா. பத்திநாதர் | 1945-01-01 | 1954-12-31 |
| 06 | திரு. வி. மனுவல்பிள்ளை | 1955-01-01 | 1956-12-31 |
| 07 | திரு. பெ. அந்தோனிப்பிள்ளை | 1957-01-01 | 1957-12-31 |
| 08 | திரு. பே. ஆசீர்வாதம் | 1958-01-01 | 1968-10-31 |
| 09 | திரு. யு. யோசேப் | 1968-11-01 | 1968-12-31 |
| 10 | திரு. ஞா. பத்திநாதர் | 1969-01-01 | 1970-12-31 |
| 11 | திரு. செ. இரத்தினம் | 1971-01-01 | 1972-03-22 |
| 12 | திரு. க. அருளப்பு | 1972-03-23 | 1975-05-04 |
| 13 | திரு. ச. சிவசம்பு | 1975-05-05 | 1975-09-14 |
| 14 | திரு. க. சுப்பையா | 1975-09-15 | 1983-11-24 |
| 15 | திரு. ஐ. மார்க்கண்டன் | 1983-11-25 | 1997-01-01 |
| 16 | திருமதி. யே. அன்ரனிப்பிள்ளை | 1997-01-2 | 2000-11-12 |
| 17 | திருமதி. வா. தர்மபாலசுந்தரம் | 2000-11-13 | 2013-03-20 |
| 18 | திருமதி. M.J.A ஏனஸ்ற் | 2013-03-21 | 2014-01-26 |
| 19 | திரு. க. சிவபாலன் | 2014-01-27 | தொடர்ந்து சேவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் ஆளணி – 2015

1. திரு.க.சிவபாலன் (அதிபர்) B.A, Dip.in.Edu, S.L.T.S – Gr –I
2. செல்வி. தா. சற்குணநாயகி – Pri.Tr. S.L.T.S – 2 I
3. தி:ருமதி. க. தர்மதாஸ் - Pri.Tr. S.L.T.S – 3 I
4. திருமதி. சு. பாகீஸ்வரன் - B.B.M , S.L.T.S – 2 II
5. செல்வி .நா. வேணுகா – Dip.in Teaching, S.L.T.S – 3I

**தொண்டர் ஆசிரியர்கள்**

1. செல்வி . பா. திவ்யா – G.C.E. (A/L)
2. செல்வி. ப. டயாளினி - G.C.E. (A/L)

## பொதுப் பரீட்சையான தரம் 5 - புலமைப் பரீட்சை பெறுபேறுகள் (கடந்த 5 வருடங்கள்)

| வருடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 15 | 10 | 15 | 08 | 14 |
| சித்தியடைந்தோர் | 01 | - | - | - | 01 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 03 | - | 03 | 05 | 06 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 04 | 04 | 05 | - | 03 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற சதவீதம் | 53.3% | 40.0% | 53.3% | 62.5% | 71.4% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

## மன்றங்கள்

### இந்து மன்றம்

சமய விழுமியப் பண்புகளை வளர்க்கும் நோக்குடனும், சமயபாட அறிவினை விருத்தி செய்யும் முகமாகவும் இம் மன்றம் சிறப்பாக இயங்கி வருகின்றது. இம் மன்றச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. த. கற்பகராணி செயற்பட்டு வருகின்றார். இம் மன்றத்தின் மூலம் வருடந்தோறும் நடைபெறும் நவராத்திரி விழா, குருபூசைத்தினங்கள், கோலம் போடுதல் போட்டி, சகலகலாவல்லிமாலை ஓதற்போட்டி என்பனவற்றை நிகழ்த்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாணி விழாவின் போது பரிசில்கள் சான்றிதழ்கள் என்பனவும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

### மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்திற்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. த.கற்பகராணி செயற்பட்டு வருகின்றார். மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை வளர்தெடுப்பதற் அரும்பணியாற்றி வருகின்றார். இதன் பயனாக மாணவர்கள் குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம் போட்டிகளில் வெற்றிகளை பெற்று வருகின்றனர்.

### விளையாட்டு

இவ் வருடம் எமது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது இவ் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் இடம்பெற வேண்டிய சகல அம்சங்களும் பொருந்தியதாக நடாத்தப்பட்ட இப் போட்டியில் பாடசாலையின் சக மாணவர்களும் பங்கு பற்றித் தமது திறன்களை வெளிக்காட்டி வெற்றிகளைப்பெற்றுள்ளனர்.

விளையாட்டுத்துறைக்குப் பொறப்பாக இருந்து செயற்பட்டு மாணவர்களை நெறிப்படுத்திய விளையாட்டுத்துறை செயலாளர் திருமதி.சு.பாகீஸ்வரன் மற்றும் சகல ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

### கட்டாயக் கல்விக் குழு

மாணவர்களின் வரவு ஒழுங்கு, நேரத்திற்குப் பாடசாலைக்கு வருதல் என்பனவற்றில் எமது கட்டாயக் கல்விக்குழு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. கட்டாயக் கல்விக் குழுவிற்குப் பொறுப்பாக ஆசிரியை திருமதி. சு. பாகீஸ்வரன், அதிபர் கடமையாற்றி வருகின்றனர்.

### ஆசிரியர் கழகம்

எமது பாடசாலையின் ஆசிரியர் கழகமானது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியர்களின் குடும்பங்களில் நிகழும் சகல நிகழ்வுகளிலும் கழக அங்கத்தவர்கள் முழுமையாகப் பங்கு பற்றி தமது ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். அத்துடன் புதிதாக கடமைக்கு வரும் அதிபர், ஆசிரியர்களைப் உவகையுடன் வரவேற்று மகிழ்கின்றனர். தமது தேவைகள் கருதி மாற்றலாகிச் செல்பவர்களுக்கும் ஒய்வு பெற்றுச் செல்பவர்களுக்கும் பிரிவுபசாரமும் நினைவுப் பரிசில்களும் வழங்கி கௌரவித்து மகிழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழு

பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பிடல் போன்ற செயற்பாடுகளை இக் குழு ஆற்றி வருகின்றது. 2014/2015 ஆண்டுகளுக்கான உறுப்பினர் விபரம் பின்வருமாறு

1. தலைவர் :- திரு. க.சிவபாலன் (அதிபர்)
2. செயலார் :- திரு. இ. ரவிக்குமார் (பெற்றோர்)
3. பொருளாளர் :- திருமதி. த. கற்பகராணி (ஆசிரியை)

**உறுப்பினர்கள்**

1. திருமதி. சு. பாகீஸ்வரன்
2. செல்வி. நா. வேணுகா
3. திருமதி. த. சுகிர்தகுணநாயகி (பெற்றோர்)
4. திருமதி . ஸ்ரீ. டயா (பெற்றோர்)
5. திருமதி. க. தனுசா (பழைய மாணவர்)
6. திரு. ஞா. தேருசன் (பழைய மாணவர்)

வலயப்பிரதிநிதி :- திரு. S .சிறீதரன் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்- விஞ்ஞானம்)

## பாடசாலைக்கு இன்னும் தேவையானவை

1. பாடசாலை மண்டபத்தின் தளம் சீர் செய்யப்பட வேண்டி உள்ளது (80X20) தளமானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.
2. மண்டபத்தின் கூரையும் சீர் செய்யப்பட வேண்டி உள்ளது. மழைகாலத்தில் மாணவர்களின் கல்வி இதனால் பாதிப்படைகின்றது.
3. சமையல் அறையினையும் மண்டபத்தினையும் இணைக்கும் வகையில் நடைபாதை ஒன்று அமைக்க வேண்டிய தேவை உள்ளது. உலக உணவுத்திட்ட அதிகாரிகள் பாடசாலையினை தரிசித்த வேளை அதற்கு முக்கியத்துவம் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.
4. பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்ககள், பாடசாலையினை தரிசிக்க வரும் அலுவர்கள் மற்றும் மாணவர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு வாகன தரிப்பு அமைவிடம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டி உள்ளது.
5. மலசல கூடத்தினை சீர் செய்ய வேண்டி உள்ளது.
6. பாடசாலையின் பாவைனைக்கு 3 உருக்கு அலுமாரிகள் மற்றும் போட்டோ கொப்பி இயந்திரம் ஒன்றும் தேவையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும் நிறைவும்

இன்றைய விழாவின் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் பல வேலைப்பளுக்களின் மத்தியிலும் நாம் அழைத்த போது எவ்வித மறுப்புமின்றி இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிப்பதையிட்டு அவர்களுக்கு எமது பாடசாலைச்சமூகத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவுத்துக் கொள்கின்றேன்.

அடுத்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய ச.இயூலின் பிரான்சிஸ் அவர்கள் மற்றும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வணக்கத்திற்குரிய V. இராஜ்குமார் அவர்கள் மற்றும் கல்வாரி பூரண சுவிஷேச திருச்சபை வணக்கத்திற்குரிய S . ஆமோஸ் அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலையின் அபிவிருத்திக் குழுவின் வலயப்பிரதிநிதியுமாகிய திரு. S. சிறிதரன் அவர்கள் தமது வேலைப்பளுக்களுக்கு மத்தியில் எமது அழைப்பினை ஏற்று வருகை தந்தமைக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

வலிவடக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் அவர்கள் எமது வேண்டுகோளை ஏற்று இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கி உதவி செய்துள்ளார் அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அளவெட்டி மேற்கு கிராம சேவையாளர் திரு. சு. பூபாலசிங்கம் அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இந்நிகழ்வுகள் சிறக்க பாடசாலைச் சமூகத்தினருடன் தொடர்புகொண்டு நிதி மற்றும் பொருள் உதவிகள் பெற்று வழங்கிய திருமதி. ச. சுகிர்தகுணநாயகி அவர்கட்கும், திருமதி. சி.மேனகா அவர்கட்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். நிகழ்வு சிறக்க சரிர உதவிகள் வழங்கியவர்களுக்கும், மாணவர்களுக்கான மதிய உணவுத்திட்டத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளப்பரிய உதவிகள் புரிந்து வரும் திருமதி. ரஞ்சினி தயாளகுமாரன் மற்றும் செல்வி K. மரின் சபேசினி (இராசாத்தி) அவர்கட்கும் பாடசாலைச் சமுகத்தின் நன்றிகள் உரித்தாகுக.

பாடசாலை நிகழ்வுகளில் புகைப்படப்பிடிப்பாளராக கலந்து கொண்டு உதவிகளை புரிந்த திரு.S. கண்ணன் அவர்கட்கும் பாடசாலைசமுகத்தின் சார்பாக நன்றிகள் உரித்தாகுக. மேலும் இவ்விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும், உதவிகள் பலவற்றையும் வழங்கிய அனைவருக்கும், அயற்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் மற்றும் எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***நன்றி வணக்கம்***

அதிபர்
திரு. க. சிவபாலன்
20.11.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலை

## பரிசளிப்பு விழா – 2015

### 2014ம் ஆண்டில் பரிசில் பெறுவோர் விபரம்

**முதலாம் ஆண்டு மாணவர்கள்**

1. சி. சானுயன்
2. வி. யாபேஸ்
3. அ. யோசுவா
4. ர. மிதுசாந்
5. அ. யதுனவன்
6. தே. கபினேஷ்
7. அ. அலைக்ஸ்கீதன்
8. கி. நவநீபன்
9. சு. நிலக்ஷன்
10. அ. அக்ஷா
11. கு. நிருபிகா
12. ம. கபிலையா
13. ர. அபிநயா

### தரம் - 01

| | | |
|---|---|---|
| வகுப்பு முதன்மை | - | அ. நிகூகாஸ்ரோ – 1ம் இடம் |
| | | யே. டிலச்சன் - 2ம் இடம் |
| | | கி. மானிஷா – 3ம் இடம் |
| வரவு ஒழுங்கு | - | கி. மானிஷா |
| நேர ஒழுங்கு | - | அ. நிகூகாஸ்ரோ |

### தரம் - 02

| | | |
|---|---|---|
| வகுப்பு முதன்மை | - | தே. ரிஷ்மிகா – 1ம் இடம் |
| | | பா. இதுஷாயினி – 2ம் இடம் |
| | | ஜெ. ஆசியசங்கரி – 3ம் இடம் |
| வரவு ஒழுங்கு | - | வி. பிரியங்கா |
| நேர ஒழுங்கு | - | ர. யாழவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *தரம் - 03*

வகுப்பு முதன்மை - ஸ்ரீ. தீபிகன் - 1ம் இடம்
ஆ. சாணுஜா – 2ம் இடம்
ச. ஆராதனா- 3ம் இடம்

வரவு ஒழுங்கு - ஆ. சாணுஜா

நேர ஒழுங்கு - பொ. எப்சிபா

### *தரம் -04*

வகுப்பு முதன்மை - ச. மெறின் - 1ம் இடம்
ச. ஜஸ்வினா – 2ம் இடம்
யே. பிரியசாளினி – 3ம் இடம்

வரவு ஒழங்கு - ச. மெறின்

நேர ஒழுங்கு - சு. லக்சன்

### *தரம் - 05*

வகுப்பு முதன்மை - ச. அர்ச்சனா – 1ம் இடம்
சி. திலக்ஷன் - 2ம் இடம்
வி. தனுசியா – 3ம் இடம்

### *பாடசாலைச் சுற்றாடல் சுத்தம் பேணும் மாணவர்கள்*

1. ம. கபிலன்
2. கி. கபிசாளினி
3. பி. வைஷ்ணவி
4. பி. விதுர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்*

1. செல்வி. ச. அர்ச்சனா - 134
2. செல்வி. வி. தனுசியா - 128
3. செல்வன். சி. திலக்ஷன் - 113
4. செல்வி. அ. தில்பனா - 113
5. செல்வி. பு. மதுஷா - 104

### *2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்*

1. செல்வி. ச. ஜஸ்வினா - 128
2. செல்வன். சு. லக்சன் - 126
3. செல்வி. ஞா. சுலக்சிகா - 123
4. செல்வி. அ. லக்சனா - 114
5. செல்வி. ஜெ. பிரியசாளினி - 104
6. செல்வி. கு. சர்மிளா - 100

### *2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்*

1. செல்வன். பி. தனுஸ்ரிகன் - 97
2. செல்வி. சு. டர்சிகா - 82
3. செல்வி. ஜெ. மதுசா – 81

### *2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி*

செல்வி சண்முககுமார் மெறின் - 155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் ஒளிவிழா, பரிசளிப்பு நிகழ்விற்கும் நிதி உதவிகள் புரிந்தோர்.

| பெயர் | | தொகை |
|---|---|---|
| 1. திரு. சா. செல்வரட்ணம் | - | 20,000 |
| 2. திரு. தா. அருள்தாசன் | - | 10,000 |
| 3. திரு. செ. சதுரியதாஸ் | - | 10,000 |
| 4. திரு. பொ. இராஜேந்திரன் | - | 10,000 |
| 5. திரு. S. நாகலிங்கம் | - | 5,000 |
| 6. திருமதி. ச. கௌசினி | - | 5,000 |
| 7. திருமதி. வி. கந்தையா | - | 2,000 |
| 8. திருமதி. தே. சுகந்தினி | - | 2,000 |
| 9. திருமதி. J. அன்ரனிப்பிள்ளை | - | 1,500 |
| 10. திரு. G. டானியல் | - | 1,000 |
| 11. திருமதி. மோ. சிவபாக்கியம் | - | 1,000 |
| 12. செல்வி. P. தேவஞாரூபி | - | 1,000 |
| 13. திரு. A. நிசாந்தன் | - | 1,000 |
| 14. திருமதி. M. கபிரியேல் ராஜா | - | 1,000 |
| 15. செல்வி. T.N சுகன்யா | - | 1,000 |
| 16. செல்வி. ஜெ. வினிதா | - | 1,000 |
| 17. திருமதி. S. சுகிர்தகுணநாயகி | - | 1,000 |
| 18. திரு. சுபாஸ்கரன் (திருப்பதி மிக்சர்) | - | 1,000 |
| 19. திரு. க. சிவபாலன் | - | 1,000 |
| 20. செல்வி. தா.சற்குணநாயகி | - | 1,000 |
| 21. திருமதி. த.கற்பகராணி | - | 1,000 |
| 22. திருமதி. சு. பாகீஸ்வரன் | - | 1,000 |
| 23. செல்வி. ந. வேணுகா | - | 1,000 |
| 24. திரு. செ. நாகேஸ்வரன் | - | 500 |
| 25. செல்வி. S. கல்யாணி | - | 500 |
| 26. திரு. S. நாகரட்ணம் | - | 500 |
| 27. செல்வி. S. சுதர்சினி | - | 500 |
| 28. திரு. K. அகிலகுமார் | - | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 29. திரு. T. யோசெப் | - 500 |
| 30. திரு. சே. தேவநேசன் | - 500 |
| 31. திரு. இரா. சிவகுமார் | - 500 |
| 32. திரு. இ. யதர்ஷன் | - 500 |
| 33. திரு. இ. ஞானரத்தினம் | - 500 |
| 34. திரு. அ. ஞானமணி | - 500 |
| 35. திரு. வி. ஜீவரட்ணம் | - 500 |
| 36. திரு. அ. யோகராசா | - 500 |
| 37. திரு. மா. தங்கராசா | - 500 |
| 38. திரு. இ. ஜெக்குமார் | - 500 |
| 39. திருமதி. ம. காஞ்சனாதேவி | - 500 |
| 40. திரு. கி. உதயகுமார் | - 500 |
| 41. திருமதி. பொ. விமலாதேவி | - 300 |
| 42. திரு. ரங்கநாதன் | - 200 |
| 43. திருமதி. க. சுபா | - 200 |
| 44. திருமதி. சி. மாலினிதேவி | - 100 |
| 45. திருமதி. ர. புஸ்பலதா | - 100 |
| 46. திருமதி. ந. நிர்மலாதேவி | - 100 |
| 47. திருமதி. சி. சாந்தினி | - 100 |
| 48. திருமதி. தே. பிரேமாவதி | - 100 |
| 49. திருமதி. வி. மேரிதிரேசா | - 100 |
| 50. திருமதி. மோ. அம்சலேக்கா | - 100 |

## *பொருள் உதவிபுரிந்தோர்*

- திரு. ச. சஜீபன்

(முன்னாள் உபதலைவர் - வலி வடக்கு பிரதேசசபை)
துவிச்சக்கர வண்டி -01

- திரு. தா. ஞானானந்தன் - வெற்றிக்கிண்ணங்கள் - 10
  (தாமோதரம் ஞாபசார்த்த அன்பளிப்பு)
- லயன் செ. மகாதேவா J.P - அப்பியாசப் புத்தகம் - 50
  (கந்தரோடை , சுன்னாகம்)
- திருமதி. ஞ. ஜெயவாணி (ஆசிரியர்) – ஏகலைவன் பயிற்சப்புத்தகம் - 03
  (முன்னாள் அதிபர் திரு. சுப்பையா ஞாபகார்த்த அன்பளிப்பு)
- திருமதி. தே. நாகலிங்கம் - அப்பியாசக் கொப்பி – 15
  (மாகியப்பிட்டி) பேனா – 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org